மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.T.**கோகுலகிருஷ்ணன்** B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **ஆகஸ்ட்** மாதம் **12**ம் நாள் **வெள்ளிக்**கிழமை

**சுபகிருது** ஆண்டு **ஆடி** மாதம் **27**ம் நாள்

CNR.No. TNMD-19-000058-2021

**I.A . No. 439/2021**

**in**

**O.S. No. 41/2021**

1. P. கருத்தபயல்
2. C. அருள்சாமி
3. T. அழகப்பன்

..... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1. K. அழகம்மாள்
2. தமிழ்நாடு அரசுக்காக, மாவட்ட ஆட்சியர் அவர்கள், மதுரை மாவட்டம்.
3. தமிழ்நாடு அரசுக்காக, வட்டாட்சியர் அவர்கள், வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்.
4. செயல் அலுவலர் அவர்கள், டவுன் பஞ்சாயத்து, அலங்காநல்லூர், வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு **26.03.2021**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.**சந்தனக்கருப்புச்சாமி** மற்றும் வழக்கறிஞர் **திரு. C. கண்ணன்** அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.**சிதம்பரம்** அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு. அரசு வழக்கறிஞர்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **28.06.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகளால், அசல் வழக்கினை மனுதாரர்கள்/வாதிகளின் தனிப்பட்ட தன்மை மற்றும் கருப்பு கோவில் தெரு என்ற கம்புலி தெரு வசிப்பவர்களின் பிரதிநிதித்துவ தன்மையிலும் தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி கட்டளை 1 விதி 8 மற்றும் சட்டப்பிரிவு 151 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் அசல் வழக்கின் 1ம்வாதி ஆவார் என்றும், வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தினைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் தாவா சொத்தில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதியை திரும்ப ஒப்படைக்க கோரும் பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/வாதிகளால், கருப்பு கோவில் தெரு என்ற கம்புலி தெரு குடியிருப்பவர்கள் சார்பாகவும். V. கம்மாளப்பட்டி உட்கடை அலங்காநல்லூர் கிராம பொது மக்கள் சார்பாகவும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/வாதிகளும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியும், கருப்பு கோவில் தெரு என்ற கம்புலி தெருவில் வசிப்பவர்களும் தாவா சொத்தினை பொதுதெரு சொத்தாக அனுபவம் செய்து வருகின்றார்கள் என்றும், 1ம் பிரதிவாதியானவர் சட்டத்தை மதிக்காதவர் மற்றும் உயர் பதவியில் இருப்பவர் என்பதால் தாவா பொது பாதையை மறைத்து பாத்ரூம் கட்டி வாதிகள் மற்றும் கருப்பு கோவில் தெருவில் வசிப்பவர்கள் வலசையிலிருந்து V. கம்மாளபட்டி மெயின்ரோட்டிற்கு செல்லும் பொதுபாதை அனுபவத்தினை தடை செய்துள்ளார் என்றும், வாதிகள் மற்றும் கருப்பு கோவில் தெரு என்ற கம்புலி தெருவில் வசிப்பவர்களுக்கு வலசையிலிருந்து V. கம்மாளபட்டி மெயின் ரோட்டிற்கு செல்வதற்கு மேற்படி பொதுபாதையை தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், அதனை தவிர வேறு பொது பாதை இல்லை என்றும், எனவே பொது நலனை பாதுகாக்கும் பொருட்டும் தாவா சொத்தான பொது பாதையில் உள்ள பொதுவான உரிமைக்கும், மனுதாரர்கள்/வாதிகள் சார்பாகவும், கருப்பு கோவில் தெருவில் வசிப்பவர் பிரதிநிதியாகவும், அசல் வழக்கினை தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்யப்படுவது அவசியமானது என்றும், இம்மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே, அசல் வழக்கினை மனுதாரர்கள்/வாதிகளின் தனிப்பட்ட தன்மை மற்றும் கருப்பு கோவில் தெரு என்ற கம்புலி தெருவில் வசிப்பவர்களின் பிரதிநிதித்துவ தன்மையிலும் தாக்கல் செய்வதற்கு இம்மனுவினை அனுமதிக்கும்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை இந்த மனுவிற்கும் எதிர்உரையாக பாவித்துக்கொள்ள வேண்டுமென குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

தாவா சொத்தினை கருப்புக்கோவில் தெரு (எ) கம்புலி தெருவில் வசிப்பவர் சுமார் 50

ஆண்டு காலத்திற்கும் மேலாக பொதுபாதையாக பயன்படுத்தி வருவதை ஆவணங்களின் மூலம் வாதிகளே நிரூபணம் செய்யவேண்டும் என்றும், வாதிகள் கூறுவது போல் பொதுநடைபாதையை ஆக்கிரமிப்பு செய்து 1ம் பிரதிவாதி எவ்வித தடையையும் ஏற்படுத்தவில்லை என்றும், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமான இடத்தில் தான் வீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றும், அவ்வாறு பொதுநடைபாதையை மறைத்து 1ம் பிரதிவாதியால் கட்டப்பட்டதாக கூறப்படும் கட்டிடத்தை மேற்படி தெருவில் வசிப்பவர்கள் யாரும் அகற்றுமாறு கூறவில்லை என்றும், கடந்த 02.08.2020ம் தேதியில் காவல் ஆய்வாளர் 1ம் பிரதிவாதி அவரது சொந்த இடத்தில் கட்டிடம் கட்டியுள்ளதால், அதில் காவல்துறை தலையிட முடியாது என்றும், 1ம் பிரதிவாதியிடம் தேவையற்ற பிரச்சனை செய்ய வேண்டாம் என்று தான் அறிவுரை வழங்கப்பட்டது என்றும், 05.08.2020ம் தேதியில் 4ம் பிரதிவாதிக்கு வாதிகள் புகார் மனு அளித்த விபரம் எதுவும் தெரியாது என்றும், 4ம் பிரதிவாதியிடம் 1ம் பிரதிவாதி முறையாக கொடுத்த விளக்கத்தின் உண்மைத்தன்மையை ஏற்றுகொண்டு 4ம்பிரதிவாதியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 1ம்பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள சொத்திற்கும், வாதிகள் பிராதில் கூறும் பொதுநடைபாதைக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், உண்மையில் வாதிகள் தான் 1ம் பிரதிவாதியின் அமைதியான அனுபவத்திற்கு தொடர்ந்து இடையூறு செய்து வருகின்றனர் என்றும், 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வரும் சொத்தானது 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சல்லி அடைக்க மூப்பனார் அவர்களால் கடந்த 06.05.1968ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்டு நாளது தேதி வரை அவரது அனுபவ சுவாதீனத்தில் 50 வருட காலத்திற்கு மேலாக உள்ள நிலையில், ஏதோ தற்போது தான் 1ம் பிரதிவாதி கட்டிடம் கட்டியது போல இல்லாத பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு வாதிகள் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் இம்மனுவிற்கு எதிர் மனு உரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

இறுதியாக,

இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>**தீர்வு:-**</u>

4) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

5) இம்மனுவின் அசல் வழக்கானது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், தாவா சொத்துக்களை பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும்

1ம்பிரதிவாதியால் தாவா பொது நடைபாதையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்கள்/வாதிகளால், வாதிகளை கருப்புக்கோவில் தெரு (எ) கம்புலி தெருவில் வசிப்பவர்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் அசல் வழக்கினை தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி கட்டளை 1 விதி 8 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

7) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையினை இந்த மனுவிற்கு எதிர்மனுஉரையாக பாவித்துக்கொள்ள குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்மனு உரையினை தங்களது எதிர்மனுஉரையாக பாவித்துக்கொள்ள வேண்டுமென குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) அதன்படி, 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

9) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், கருப்புக் கோவில் தெரு (எ) கம்புலி தெருவில் 1ம் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்து தாவா பொது நடைபாதையில் குளியலறை கட்டப்பட்டதாகவும், அதனால் மேற்படி தெருவில் வசிப்பவர்கள் வலசையிலிருந்து V. கம்மாளபட்டி மெயின் ரோட்டிற்கு செல்லக்கூடிய ஒரே பாதையான மேற்படி தாவா பொது நடைபாதை அனுபவம் தடை செய்யப்பட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையிலும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் மேற்படி பொருண்மை முற்றிலுமாக மறுக்கப்பட்டுள்ள நிலையிலும், தாவா பொது நடைபாதையில் 1ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை அசல் வழக்கு விசாரணைக்கு பின்னரே தீர்வு காண முடியும் இந்த மனுவில் தீர்வு காண இயலாது என்றே இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10) மேலும், இந்த மனு அனுமதிக்கப்படுவதினால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அசல் வழக்கில் எதிர்வாதம் செய்யப்படுவதில், எந்த வகையிலும் பாதகம் ஏற்பட வாய்ப்பில்லை என்பதோடு, அசல் வழக்கின் உண்மையான பரிகாரத்தன்மையை மாற்றம் செய்யும் விதத்திலோ அல்லது புதிய வழக்கு மூலத்தை உருவாக்கும் விதத்திலோ இல்லை என இந்நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

11) எனவே மேற்கண்ட இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் மற்றும் சட்டநிலைப்பாடுகளின்படி அசல் வழக்கு விசாரணையில் மேலும் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, மனுதாரர்கள்/வாதிகள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக,

இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. செலவுதொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் :** இல்லை

ஓம். T. கோகுலகிருஷ்ணன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.